செய்தி வெளியீடு எண்:611 நாள்:14.08.2021

## செய்தி வெளியீடு

## பெண்களுக்கான மாநில கொள்கை வரைவு உருவாக்குதல் தொடர்பான கருத்துப்பட்டறை

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக பெண்களுக்கான மாநில கொள்கை வரைவு உருவாக்கும் கருத்துப் பட்டறை 12.08.2021 அன்று மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் **திருமதி.P.கீதா ஜீவன்** அவர்களது தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் முதன்மைச் செயலளர் திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றி தமிழ்நாடு அரசு சமூக நலத் துறையின் மூலம் பெண்களின் நலன், உரிமை, அதிகாரம் அளித்தல் தொடர்பாக மாநில கொள்கை உருவாக்கிட தேவையுள்ளதன் அடிப்படைகள் குறித்து விரிவாக தெரிவித்தார்கள்.

முதல் முயற்சியாக இன்று நடைபெற்ற கருத்துப் பட்டறையில், தலைமை உரையாற்றிய மாண்புமிகு **சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.P.கீதா ஜீவன்** அவர்கள், ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான அறிவுரையின்படி, மகளிர் நலன், பாதுகாப்பு, உரிமைகள், சமூக நீதி, சமநிலை ஆகியவற்றை உறுதி செய்திட பெண்களுக்கான மாநில கொள்கை ஒன்றை உருவாக்கிட உத்தரவிட்டதன் அடிப்படையில் முதற்கட்டமாக இன்று அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பல்துறை அறிஞர்கள் / வல்லுநர்களின் பரிந்துரைகள் பெற்றிட கருத்துப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது.’’ இந்த கருத்துப் பட்டறை என்பது தொடர்ந்து பல்வேறு கட்டங்களில் மேலும் பல அறிஞர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்கள். கருத்துப் பட்டறைகளின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு பெண்கள் நலனுக்கான மாநில கொள்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் வகுக்கப்பட்டு செயலாக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்கள்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் **திருமதி. கனிமொழி கருணாநிதி** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில், “பெண்களுக்கு உரிய ஊதியமில்லாது அங்கீகாரமற்று செய்யக்கூடிய பணிகளாக பல உள்ளன. குறிப்பாக விவசாயம், மீனவத் துறையின் பணிகள் உள்ளிட்டவைகளும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் அப்பெண்களின் வாழ்வாதாரம், உரிமை, பாதுகாப்பு ஆகியவற்றையும் உறுதி செய்வதாக இந்த மாநில கொள்கை இருக்க வேண்டும்.'', எனவும் வலியுறுத்தினார். பெண்கள் தன் வாழ்விற்கான முடிவுகளை தானே தேர்ந்தெடுக்கும் உரிமை பெறுவதை உள்ளடக்கியதாக பெண்களுக்கான கொள்கை இருக்க வேண்டும் என்ற கருத்தினை பதிவு செய்தார்கள். குடும்ப வன்முறைகளை தடுத்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாக இவ்வரைவு கொள்கை இருந்திட வேண்டுமெனவும் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் இணையம் வழியாக பாராளுமன்ற உறுப்பினர் திரு.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பாலபாரதி ஆகியோர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர். மேலும் இந்நிகழ்வில் திருமதி. சீமா அகர்வால், இ.கா.ப., திரு.வன்னியபெருமாள், இ.கா.ப., டாக்டர். தாரா ரங்கசாமி, திருமதி. வாசுகி, அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம், வழக்கறிஞர் திருமதி. அருள்மொழி, டாக்டர். நப்பின்னை மற்றும் பத்திரிக்கையாளர் திருமதி. கவிதா முரளிதரன், டாக்டர். யாழினி, திருமதி.தேன்மொழி, மாநகர காவல்துறை, திரு. ராஜா சாமுவேல், சென்னை சமூக பணி கல்லூரி, திரு.கௌதமன், சமூகவியல் துறை தலைவர், லயோலா கல்லூரி ஆகியோர் நேரில் கலந்து கொண்டு தங்களது அளப்பரிய கருத்துகளை வழங்கினார்கள்.

மேலும், இந்நிகழ்வில் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, திருமதி. வி.அமுதவல்லி, இ.ஆ.ப., இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட, திருமதி. வளர்மதி, இ.ஆ.ப., இயக்குநர், சமூக பாதுகாப்புத் துறை மற்றும் சமூக நலத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களது நன்றி உரையுடன் கருத்துப்பட்டறை இனிதே நிறைவுற்றது.

இயக்குநர்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9